# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

# DEPOSITION OF WITNESS

# O.S.308/2018

# CNR.No.TNCB19000

Date: 25.03.2026 PW1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | இந்திராணி | **வயது** | 62 |
| **த/பெ** | **சுப்ரமணியன்** | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| **விலாசம்** | **பட்டக்காரம்பாளையம்** | **மாவட்டம்** | கோவை |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 25th March 2026

வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.

**1-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வழக்கு சொத்து சம்பந்தமான வருவாய்துறை ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பழைய பத்திரங்களை மட்டும் கொடுத்தேன். 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியின் பெயரில் வா. சா. ஆ. 8 செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்த விபரம் 2017 ம் ஆண்டிலேயே எனக்கு தெரியும் என்றால் அப்போது எனக்கு தெரியாது. எனக்கு முன்பே தெரியும் என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல., அதனால்தான் எந்தவிதமான வருவாய்துறை ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு 2019 ம் வருடம் 2ம் பிரதிவாதியை வழக்கில் சேர்க்க மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்த விபரம் தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி அவருடைய எதிர்வழக்குரையில் 2ம் பிரதிவாதியின் பெயரில் வருவாய்துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக சொல்லியுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்ய பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல.

அது சம்பந்தமாக 1-ம் பிரதிவாதிக்கு வழக்கறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான்.1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் சட்டப்படி செல்லும் என்றால் சரியல்ல. ஆதியில் தாவா சொத்து எனது தாத்தா ரங்கப்ப கவுடருக்கு பாத்தியப்பட்டது. எனது தாத்தா யாரிடமிருந்து கிரையம் வாங்கினார் என்றால் ஒரு லிங்கப்ப கவுடரிடமிருந்து வாங்கினார்.

( வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.